12-05-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 30.11.1999

## நேர்மையுடன் தேர்ச்சி பெறுவதற்கு அனைத்து பொக்கிஷங்களின் கணக்கை சேமித்து சம்பன்னம் (நிறைவானவர்) ஆகுங்கள்

இன்று பாப்தாதா எந்த சபையை பார்த்துக் கொண்டிருக்கின்றார்? இன்றைய சபையில் ஒவ்வொரு குழந்தையும் உயர்ந்தவர்கள் (ஹையஸ்ட்) மற்றும் அழிவற்ற பொக்கிசங்களில் செல்வந்தர்களாக (ரிச்சஸ்ட்) இருக்கின்றனர். உலகத்தினர் எவ்வளவு தான் செல்வந்தர்களாக இருந்தாலும் அவர்கள் ஒரு பிறவிக்கு மட்டுமே செல்வந்தர்கள். ஒரு பிறவியிலும் செல்வந்தர்களாக இருப்பார்களா, இல்லையா என்ற நிச்சயம் கிடையாது. உலகிலேயே எவ்வளவு மிகப் பெரிய செல்வந்தர்களாக இருக்கட்டும், ஆனால் ஒரு பிறவிக்கு மட்டுமே. ஆனால் நீங்கள் நிச்சயம் மற்றும் போதையுடன் கூறுகிறீர்கள் - நாம் அநேக பிறவிகள் செல்வந்தர்களாக இருக்கின்றோம். ஏனெனில் நீங்கள் அனைத்து பொக்கிஷங்களிலும் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். நாம் இந்த நேரத்து முயற்சியின் மூலம் ஒரு நாளிலேயே அதிக வருமானம் செய்யக் கூடியவர்கள் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஒரு நாளில் எவ்வளவு வருமானம் செய்கிறீர்கள் என்பதை அறிவீர்களா? கணக்கு அறிவீர்கள் அல்லவா! ஒரு அடியில் பல மடங்கு என்று பாடப்பட்டிருக்கிறது, அனுபவம் இருக்கிறது. ஆக ஒரு நாளில் தந்தையின் மூலம், தந்தையின் ஞானத்தின் மூலம், நினைவின் மூலம் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு ஆகிறது. முழு நாளும் நினைவிலிருந்து எவ்வளவு அடி எடுத்து வைக்கிறீர்களோ அவ்வளவு பல மடங்கு சேமிப்பாகிறது. இவ்வாறு வருமானம் செய்யக் கூடிய, பொக்கிஷங்களை சேமிக்கக் கூடியவர்கள் உலகில் யாராவது இருப்பார்களா! அல்லது இருக்கிறார்களா? உலகை சுற்றி வந்து பாருங்கள், உங்களைத் தவிர இவ்வளவு சேமிக்க வேறு யாராலும் முடியாது. ஆகையால் தந்தை கூறுகின்றார் – ஆத்மாக்களாகிய நமது பாக்கியத்தை பரம் ஆத்மாவின் மூலம் இவ்வளவு சிரேஷ்டமானதாக ஆகியிருக் கிறது என்ற சிரேஷ்ட நினைவில் இருங்கள்.

தங்களது பொக்கிஷங்களை அறிவீர்கள் தானே! நேரத்தின் பொக்கிஷத்தையும் அறிவீர்கள் - சங்கமயுகத்தின் நேரம் எவ்வளவு உயர்ந்தது! என்ன பிராப்தி தேவையோ, அதற்கு அதிகாரியாகி தந்தையிடமிருந்து அடைந்து கொண்டிருக்கிறீர்கள். அனைத்து அதிகாரத்தையும் அடைந்து விட்டீர்கள் அல்லவா? ஒவ்வொரு சிரேஷ்ட சங்கல்பம் மிகப் பெரிய பொக்கிஷமாகும், நேரமும் பெரிய பொக்கிஷமாகும், சங்கல்பமும் பெரிய பொக்கிஷமாகும். சர்வசக்திகள் மிகப் பெரிய பொக்கிஷமாகும். ஒவ்வொரு ஞான இரத்தினமும் மிகப் பெரிய பொக்கிஷமாகும். ஒவ்வொரு குணமும் மிகப் பெரிய பொக்கிஷமாகும். சுவாசத்திற்கு சுவாசம் நினைவின் மூலம் சுவாசம் வெற்றியாகிறது என்பதை உலகத்தினரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆக உங்கள் அனைவரின் சுவாசமும் வெற்றி சொரூபமாக இருக்கிறது, வீணாவது கிடையாது. ஒவ்வொரு சுவாசத்திலும் வெற்றியின் அதிகாரம் நிறைந்திருக்கிறது. அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் பாப்தாதா ஒரே மாதிரியாகத் தான் கொடுத்திருக்கின்றார். அனைத்தும்

கொடுத்திருக் கின்றார், சமமாகவும் கொடுத்திருக்கின்றார். சிலருக்கு ஒரு குணம், சிலருக்கு 10 குணங்கள், சிலருக்கு 100 குணங்கள் என்று கொடுக்கவில்லை. கொடுக்கக் கூடிய வள்ளல் ஒவ்வொரு குழந்தைக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் பிராமணன் ஆனவுடனேயே சமமான ரூபத்தில் கொடுத்திருக்கின்றார். ஆனால் பொக்கிஷங்களை எவ்வளவு சேமித்திருக்கிறீர்கள் அல்லது செலவழித்தீர்கள்? சோதனை செய்கிறீர்களா? அவசியம் சோதிக்க வேண்டும். ஏனெனில் ஒரு பிறவிக்கானது அல்ல, ஒவ்வொரு பிறவிக்கானது. அநேக பிறவிக்காக சேமிக்க வேண்டும். சேமிப்பதற்கான விதியை அறிவீர்களா? மிகவும் எளிது. புள்ளி மட்டும் வைத்துக் கொண்டே செல்லுங்கள். புள்ளி நினைவில் இருந்தால் சேமிப்பாகும். ஸ்தூல பொக்கிஷத்திலும் கூட ஒன்றின் கூட பூஜ்யம் (பிந்து, புள்ளி) இடும் போது அதிகரித்துக் கொண்டே செல்லும் அல்லவா! அதே போன்று ஆத்மாவும் புள்ளி, தந்தையும் புள்ளி மற்றும் நாடகத்தில் எது கடந்து முடிந்ததோ அதுவும் முற்றுப்புள்ளி அதாவது புள்ளி. ஒவ்வொரு பொக்கிஷத்தையும் புள்ளி ரூபத்தில் நினைவு செய்தீர்கள் எனில் சேமிப்பு ஆகிக் கொண்டே செல்லும். அனுபவம் இருக்கிறது அல்லவா! புள்ளி வைத்தீர்கள், பிறகு வீண் ஆவதிலிருந்து சேமிப்பாகி விடுகிறது. புள்ளி வைக்க வருகிறதா? சில நேரங்களில் புள்ளி வைக்க முயற்சிக்கிறீர்கள், ஆனால் புள்ளிக்குப் பதிலாக நீண்ட கோடு ஏற்பட்டு விடுகிறது. புள்ளிக்குப் பதிலாக கேள்விக்குறி ஏற்பட்டு விடுகிறது, ஆச்சரியக்குறி ஏற்பட்டு விடுகிறது. ஆக சேமிப்பு கணக்கை அதிகப்படுத்துவதற்கான விதி புள்ளி. நஷ்டம் ஆவதற்கான வழி நீண்ட கோடு போடுவதாகும், கேள்விக்குறி போடுவதாகும், ஆச்சரியக் குறி போடுவதாகும். எளிதானது எது? புள்ளி வைப்பது அல்லவா! ஆக விதி மிகவும் எளிது - சுவமானம் மற்றும் தந்தையின் நினைவு மற்றும் வீணானவைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்.

பாப்தாதா முன்பும் கூறியிருந்தார் - தினமும் அமிர்தவேளையில் தனக்குத் தானே மூன்று நினைவுகள் என்ற புள்ளி திலகம் இட்டுக் கொண்டீர்கள் எனில் ஒரு பொக்கிஷம் கூட வீண் ஆகாது. ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு பொக்கிஷம் சேமிப்பு ஆகிக் கொண்டே செல்லும். அனைத்து குழந்தைகளின் ஒவ்வொரு பொக்கிஷத்தின் சேமிப்பிற்கான சார்ட் பாப்தாதா பார்த்தார். அதில் என்ன பார்த்திருப்பார்? இது வரை எவ்வளவு சேமிப்பாகி இருக்க வேண்டுமோ அவ்வளவு கிடையாது. நேரம், சங்கல்பம், வார்த்தை வீணாகவும் ஆகிவிடுகிறது. போகப்போக அவ்வபொழுது நேரத்தின் மகத்துவம் குறைந்து விடுகிறது. ஒருவேளை நேரத்தின் மகத்துவம் சதா நினை விருந்தால், வெளிப்படையாக இருந்தால் நேரத்தை இன்னும் அதிகமாக வெற்றியுடையதாக ஆக்க முடியும். முழு நாளும் சாதாரண ரூபத்தில் நேரம் சென்று விடுகிறது. கெட்ட வழியில் அல்ல, சாதாரணமாக. அதே போன்று சங்கல்பமும் கெட்டது அல்ல, ஆனால் வீணானவைகளில் சென்று விடுகிறது. ஒரு மணி நேரத்திற்கானதை சோதனை செய்யுங்கள், ஒவ்வொரு ஒரு மணி நேரமும் நேரம் மற்றும் சங்கல்பம் எவ்வளவு சாதாரணமாக செல்கிறது? சேமிப்பு ஆவது கிடையாது. பிறகு பாப்தாதா சைகையும் கொடுக்கின்றார் - ஆனால் பாப்தாதாவிற்கு அதிக ஆறுதல் கொடுக்கிறீர்கள். பாபா, சிறிது தான் இந்த மாதிரி சங்கல்பம் இருக்கிறது, அவ்வளவு தான். சிறிது தான் சங்கல்பம் செல்கிறது, சம்பூர்னம் ஆகிவிடுவோம், சரியாகி விடுவோம். இன்னும் கடைசி நிலை வரவில்லை, சிறிது காலம்

இருக்கிறது. சரியான நேரத்தில் சம்பன்னம் ஆகிவிடுவோம். ஆனால் பாப்தாதா அடிக்கடி கூறிகின்றார் - நீண்ட கால சேமிப்பு தேவை. கடைசி நேரத்தின் சேமிப்பு கணக்கில் சம்பன்னம் ஆகி விடுவோம், நேரம் வரும் போது ஆகிவிடுவோம் என்பது கிடையாது. நீண்ட கால சேமிப்பு நீண்ட காலம் நடைபெறும். ஆஸ்தி அடையும் விசயத்தில் நான் லெட்சுமி-நாராயணன் ஆவேன் என்று அனைவரும் கூறுகிறீர்கள். ஒருவேளை திரேதா யுகத்தில் வருவீர்களா? கை உயர்த்தக் கூறினால் யாரும் கை உயர்த்துவது கிடையாது. லெட்சுமி-நாராயணன் ஆவீர்களா? என்று கேட்டால் அனைவரும் கை உயர்த்துகிறீர்கள். நீண்ட கால சேமிப்பு கணக்கு இருந்தால் முழு ஆஸ்தி கிடைக்கும். சிறிதளவு சேமிப்பு இருக்கிறது எனில் முழு ஆஸ்தி எப்படி கிடைக்கும்? ஆகையால் அனைத்து பொக்கிஷங்களையும் எவ்வளவு சேமிக்க முடியுமோ அவ்வளவு இப்பொழுதிலிருந்தே சேமிப்பு செய்யுங்கள். ஏற்பட்டு விடும், வந்து விடும். இவ்வாறு டும், டும் என்று கூறாதீர்கள். செய்தே ஆக வேண்டும் என்பது தான் திடதா ஆகும். அமிர்தவேளையில் அமரும் பொழுது நல்ல ஸ்திதியில் அமர்கிறீர்கள், உள்ளத்தில் மிகவும் நல்ல உறுதிமொழி செய்கிறீர்கள் - இதை செய்வேன், இவ்வாறு செய்வேன். அதிசயம் செய்து காட்டுவேன். இது நல்ல விசயம் தான். சிரேஷ்ட சங்கல்பம் செய்கிறீர்கள். ஆனால் பாப்தாதா கூறுகின்றார் - இது போன்ற அனைத்து உறுதிமொழிகளையும் செயலில் கொண்டு வாருங்கள். உறுதிமொழி மட்டுமே செய்யாதீர்கள், என்ன உறுதிமொழி செய்கிறீர்களோ அதை மனம்-சொல் மற்றும் செயலில் கொண்டு வாருங்கள். குழந்தைகள் மிக நல்ல நல்ல சங்கல்பங்கள் செய்கிறீர்கள். பாப்தாதா அந்த நேரத்தில் குஷியடைகின்றார். ஏனெனில் தைரியம் வைக்கிறீர்கள் அல்லவா! இவ்வாறு ஆவேன், இதை செய்வேன் மிக நன்றாக தைரியம் வைக்கிறீர்கள். தைரியத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். ஆனால் காரியத்தில் கொண்டு வரும் போது அவ்வபோது என்று ஆகிவிடுகிறது. உறுதிமொழி கொடுப்பது மிக எளிது. ஆனால் காரியத்தில் கொண்டு வருவது என்றால் உறுதிமொழி கடைபிடிப்பதாகும். உறுதிமொழி செய்பவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் கடைபிடிப்பவர்கள் நம்பர்வராக ஆகிவிடுகின்றனர். ஆக சங்கல்பம் மற்றும் செயல், திட்டம் (பிளான்) மற்றும் நடைமுறை (பிராக்டிக்கல்) இரண்டடையும் சமமாக ஆக்குங்கள். ஆக்க முடியும் அல்லவா? வியாபாரிகள் வந்திருக்கிறீர்கள். வியாபாரிகள் வியாபாரம் செய்வதை அறிவீர்கள் அல்லவா! சேமிப்பு செய்வதை அறிவீர்கள் தானே! இன்ஜினியர் மற்றும் விஞ்ஞானிகளும் நடைமுறையில் காரியம் செய்கின்றனர். கிராமத்தைச் சார்ந்தவர்களை (கிராம வர்கம்) பாப்தாதா ஆட்சியாளர் என்று கூறுகின்றார். ஏனெனில் இவர்கள் சேவை செய்யவில்லையெனில் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. ஆக வந்திருக்கக் கூடிய மூன்று வர்க்கத்தினர்களும் செயல் செய்யக் கூடியவர்கள். வெறுமனே கூறக் கூடியவர்கள் அல்ல, செய்யக் கூடியவர்கள். எனவே அனைத்து உறுதிமொழிகளையும் செயல்படுத்தக் கூடிய ஆத்மாக்கள் தானே! அல்லது வெறும் உறுதிமொழி செய்பவர்களா? உறுதிமொழி செய்யும் நேரத்தில் பாப்தாதாவிடம் தைரியம் காண்பித்து குஷிபடுத்தி விடுகிறீர்கள். பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் உறுதிமொழி கோப்பு இருக்கிறது. அங்கு (வதனத்தில்) உறுதிமொழிக்கான கோப்பு (பைல்) வைப்பதற்கு அலமாரி அல்லது இடத்திற்கான விசயமே இல்லை. அவ்வப்பொழுது தனது அலௌகீக டி.வி யில் பாப்தாதா திறக்கின்றார். சதா திறக்கமாட்டார், அவ்வபொழுது திறக்கின்றார் எனில் கேட்க முடிகிறது.

தங்களுக்குள் என்ன உரையாடிக் கொள்கிறீர்கள் என்பதையும் கேட்கின்றார். ஆகையால் பாப்தாதா கூறுகின்றார் - வீணானவைகளை சேமிப்பு கணக்கில் சேமியுங்கள்.

பிராமணன் என்றால் அலௌகீகம். பிராமண வாழ்க்கையின் மகத்துவம் மிகவும் உயர்ந்தது. பிராப்திகள் மிகவும் உயர்ந்தது. சுவமானம் மிகவும் உயர்ந்தது, மற்றும் சங்கமத்தின் நேரத்தில் பாபாவின் குழந்தையாக ஆவதும் உயர்ந்ததிலும் உயர்ந்த பல கோடி மடங்கு பாக்கியமாகும். ஆகையால் பாப்தாதா கூறுகின்றார் - ஒவ்வொரு பொக்கிஷத்திற்கு மதிப்பு கொடுங்கள். சொற்பொழிவின் போது மற்றவர்களுக்கு சங்கமயுகத்தின் மகிமை எவ்வளவு கூறுகிறீர்கள்! சங்கமயுகத்தின் மகிமை கூறுங்கள் என்று ஒருவர் உங்களுக்கு தலைப்பு கொடுத்தால் எவ்வளவு நேரம் செய்ய முடியும்? ஒரு மணி நேரம் செய்ய முடியுமா? ஆசிரியர்கள் கூறுங்கள். யாரால் செய்ய முடியுமோ அவர்கள் கை உயர்த்துங்கள். ஆக எவ்வாறு மற்றவர்களுக்கு மகத்துவம் கூறுகிறீர்களோ, மகத்துவம் மிகவும் நன்றாக அறிந்திருக்கிறீர்கள். அறியவில்லை என்று பாப்தாதா கூறமாட்டார். கூற முடிகிறது எனில் அறிந்திருக்கிறீர்கள், அதனால் தான் கூற முடிகிறது. ஆனால் அது அமிழ்ந்து (மெர்ஜ்) விடுகிறது. வெளிப்படையான ரூபத்தில் (எமர்ஜ்) நினைவு இருக்க வேண்டும் - அது சில நேரம் குறைந்து விடுகிறது, சில நேரம் அதிகமாக இருக்கிறது. ஆக தனது ஈஸ்வரிய போதை வெளிப்படையாக வைத்துக் கொள்ளுங்கள். ஆம், நான் ஆகி விட்டேன், ஆகி விட்டேன் என்ற இருக்கக் கூடாது. நடைமுறையில் இருக்கின்றேன் என்பது வெளிப்படையான ரூபத்தில் இருக்க வேண்டும். நிச்சயம் இருக்கிறது, ஆனால் நிச்சயத்தின் அடையாளம் ஆன்மீக போதையாகும். எனவே முழு நேரமும் போதை இருக்க வேண்டும். ஆன்மீக போதை - நான் யார்! இந்த போதை வெளிப்படையான ரூபத்தில் இருந்தால் ஒவ்வொரு விநாடியும் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும்.

ஆக இன்று பாப்தாதா சேமிப்புக் கணக்கு பார்த்தார். ஆகையால் இன்று விசேஷ கவனம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார் - நேரத்தின் முடிவு என்பது திடீரென்று நடக்கும். நேரம் வருவதை தெரிந்து கொண்டு, தகுந்த நேரத்தில் சரியாகி விடும் என்று யோசிக்காதீர்கள். யார் நேரத்தை ஆதாரமாக நினைக்கிறார்களோ, நேரம் சரியாக்கி விடும் அல்லது தகுந்த நேரத்தில் நடந்து விடும் அவர்களுக்கு ஆசிரியர் யார்? நேரம் அல்லது சுயம் பரம் ஆத்மா? பரம் ஆத்மாவிடமிருந்து சம்பன்னம் ஆக முடியவில்லை, நேரம் சம்பன்னம் ஆக்கி விடும், இவர்களை என்ன கூறுவது? நேரம் உங்களுக்கு மாஸ்டரா? அல்லது பரமாத்மா உங்களுக்கு ஆசிரியரா? நாடகப்படி நேரம் உங்களுக்கு கற்பிக்குமா? அல்லது நேரத்தின் ஆதாரத்தில் மாற்றம் ஏற்படுமா? பிராப்தியும் தகுந்த நேரத்தில் தான் கிடைக்கும் என்பதை பாப்தாதா அறிவார். ஏனெனில் நேரம் ஆசிரியராக இருக்கிறது. நேரம் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் நேரத்தை எதிர்பார்க்காதீர்கள். அது படைப்பாகும், நீங்கள் மாஸ்டர் படைப்பவர்கள், படைப்பவரை படைப்பு எதிர்ப்பார்க்க வேண்டும், மாஸ்டர் படைப்பவர்களாகிய நீங்கள் நேரத்தை எதிர்ப்பார்க்காதீர்கள். என்ன கடினமாக இருக்கிறது? எளிதானதை சுயம் கடினமாக ஆக்கிக் கொள்கிறீர்கள். கடினம் கிடையாது, கடினம் ஆக்குகிறீர்கள். எது சுமையாக தோன்றுகிறதோ, அந்த சுமையை தந்தையிடம் கொடுத்து விடுங்கள் என்று தந்தை கூறுகின்றார். அது கொடுக்க

வரவில்லையா! சுமை தூக்கவும் செய்கிறீர்கள், பிறகு களைப்படைந்தும் விடுகிறீர்கள். தந்தையிடம் என்ன செய்வது, எப்படி செய்வது என்று புகார் கூறுகிறீர்கள். தன் மீது ஏன் சுமை தூக்கிக் கொள்கிறீர்கள்? தனது சுமையை தந்தையிடம் கொடுத்து விடுங்கள் என்று தந்தை சலுகை (ஆபர்) கொடுக்கின்றார். 63 பிறவிகள் சுமை தூக்கி பழக்கம் ஏற்பட்டு விட்டது அல்லவா! பழக்கத்தில் உறுதியானவர்களாக ஆகிவிட்டீர்கள். அதனால் தான் உழைக்க வேண்டியிருக்கிறது. சில நேரம் எளிதாக, சில நேரம் கடினமான இருக்கிறது. சில காரியம் எளிதாகவும், சில காரியம் கடினமாகவும் இருக்கிறது. சில நேரம் எளிது, சில நேரம் கடினம், ஏன்? ஏதாவது காரணம் இருக்கும் அல்லவா! காரணம் - பழக்கத்தில் உறுதியாக ஆகிவிடுகிறீர்கள். குழந்தைகளின் கடின உழைப்பு, இது தான் பாப்தாதாவிற்கு மிகப் பெரிய விசயமாக தோன்றுகிறது. நல்லதாக தோன்றவில்லை. மாஸ்டர் சர்வசக்திவான், பிறகு கடினம்? தனக்கு என்ன பட்டம் கொடுக்கிறீர்கள்? கடின யோகியா? அல்லது சகஜயோகியா? இல்லையெனில் தனது பட்டத்தை மாற்றிக் கொள்ளுங்கள் - நாங்கள் சகஜ யோகிகள் அல்ல. சில நேரம் சகஜயோகிகள், சில நேரம் கடின யோகிகள்? யோகா என்றால் என்ன? நினைவு செய்வது - அவ்வளவு தான். சக்திசாலியான யோகாவின் முன் கடினம் என்பது இருக்கவே முடியாது. யோகா என்பது ஈடுபாட்டின் நெருப்பாகும். நெருப்பானது எவ்வளவு கடினமான பொருளையும் மாற்றி விடும். இரும்பையும் வளைத்து விடும். ஈடுபாடு என்ற இந்த நெருப்பானது கடினமானதை எளியதாக மாற்றி விடாதா என்ன? சில குழந்தைகள் மிகவும் நல்ல நல்ல விசயங்களைக் கூறுகின்றனர், பாபா - என்ன செய்வது, வாயுமண்டலம் இவ்வாறு இருக்கிறது, கூட இருப்பவர்கள் இப்படி இருக்கிறார்கள். அன்னம், கொக்காக இருக்கிறார்கள், என்ன செய்வது பழைய கணக்கு-வழக்கு இருக்கிறது. மிகவும் நல்ல நல்ல விசயங்களைக் கூறுகிறீர்கள். தந்தை கேட்கிறார் - பிராமணர்களாகிய நீங்கள் எந்த ஒரு ஒப்பந்தம் எடுத்திருக்கிறீர்கள்? உலக மாற்றம் செய்வேன் என்ற ஒப்பந்தம் எடுத்திருக்கிறீர்கள். ஆக யார் உலக மாற்றம் செய்பவர்களோ அவர்கள் தங்களது கடினத்தை அழிக்க முடியாதா?

இன்று என்ன செய்வீர்கள்? சேமிப்பு கணக்கு அதிகப்படுத்துங்கள். சகஜயோகி என்று கூறுகிறீர்கள், அதை அனுபவம் செய்யுங்கள். சில நேரம் கடினம், சில நேரம் எளிது என்பதில் மஜா இருக்காது. பிராமண வாழ்க்கை என்றால் மஜா. சங்கமயுகம் என்றாலே மஜாவிற்கான யுகமாகும். சுமை தூக்கும் யுகம் அல்ல. சுமை இறக்கும் யுகமாகும். எனவே சோதனை செய்யுங்கள், தனது அதிஷ்டத்தின் சித்திரத்தை ஞானம் என்ற கண்ணாடியில் நல்ல முறையில் பாருங்கள். கண்ணாடி இருக்கிறது தானே? அல்லது இல்லையா? உடைந்து விடவில்லை தானே? அனைவருக்கும் கண்ணாடி கிடைத்திருக்கிறதா? தாய்மார்களுக்கு கண்ணாடி கிடைத்திருக்கிறதா? அல்லது தொலைந்து விட்டதா? பாண்டவர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதில் புத்திசாலிகள் தானே? கண்ணாடி இருக்கிறதா? கை நன்றாக உயர்த்துகிறீர்கள். நல்லது. அதிஷ்டம் என்ற கண்ணாடி பாருங்கள். மேலும் அதிஷ்டக் கண்ணாடியைப் பார்த்து ஆஹா ஆஹா என்ற பாட்டு பாடுங்கள். ஆஹா எனது அதிஷ்டம், ஆஹா என்னுடைய பாபா! ஆஹா எனது குடும்பம்! குடும்பமும் ஆஹா ஆஹா! இவர் மிகவும் ஆஹா ஆஹா, இது (குடும்பம்) சிறிது இவ்வாறு இருக்கிறது என்று இருக்கக் கூடாது. ஆஹா எனது குடும்பம்! ஆஹா எனது பாக்கியம்! ஆஹா

என்னுடைய பாபா! பிராமண வாழ்க்கை என்றால் ஆஹா ஆஹா. ஐயோ ஐயோ கிடையாது. சரீர வியாதியின் போதும் ஐயோ ஐயோ கிடையாது, ஆஹா. இதுவும் சுமையை இறக்கி விடுகிறது. 10 பொருளில் 3-4 பொருள் இறக்கி வைத்து விட்டால் உங்களுக்கு நல்லது தானே அல்லது ஐயோ ஐயோவா? ஆஹா சுமை இறங்கி விட்டது. ஐயோ எனது பாகமே இப்படித் தான் இருக்கிறது! ஐயோ என்னை விட்டு நோய் செல்வதே கிடையாது! நீங்கள் விட வேண்டுமா? அல்லது நோய் விடுமா? ஆஹா ஆஹா என்று கூறிக் கொண்டே செல்லுங்கள். ஆஹா ஆஹா என்று கூறுவதன் மூலம் நோயும் குஷியடைந்து விடும். பாருங்கள், இங்கும் இவ்வாறு நடக்கிறது தானே! யாரையாவது மகிமை செய்யும் போது ஆஹா ஆஹா என்று கூறுகிறார்கள். எனவே நோயுக்கும் ஆஹா ஆஹா என்று கூறுங்கள். ஐயோ என்னிடம் ஏன் வந்தாய்? எனக்குத் தான் இவ்வாறு கணக்கு இருக்கிறது. பிராப்தியின் முன் கணக்கு என்பது ஒன்றும் கிடையாது. பிராப்திகளை எதிரில் வையுங்கள் மற்றும் கணக்கு-வழக்குகளை எதிரில் வையுங்கள். அது என்னவாக இருக்கும்? மிகவும் சிறிய பொருளாக தோன்றும். அதாவது பிராமண வாழ்க்கையில் என்ன நடந்தாலும், நேர்மறையான ரூபத்தில் பாருங்கள். எதிர்மறை யானதை நேர்மறையாக மாற்ற வருகிறது தானே! எதிர்மறை, நேர்மறைக்கான பயிற்சிகளும் செய்விக்கிறீர்கள் அல்லவா! அந்த நேரத்தில் தனக்குத் தானே பயிற்சி செய்விக்கும் போது கடினம் எளிதாக ஆகிவிடும். கடினம் என்ற வார்த்தை பிராமணர்களின் அகராதியில் இருக்கக் கூடாது. நல்லது, எந்த ஒரு கணக்காக இருந்தாலும், ஆத்மாக்களிடம், சரீரத்துடன் அல்லது இயற்கையிடம். ஏனெனில் இயற்கையின் இந்த 5 தத்துவங்களும் சில நேரம் கடினத்தின் அனுபவம் ஏற்படுத்துகிறது. எந்த ஒரு கணக்கு-வழக்காக இருந்தாலும் யோக நெருப்பில் அழித்து விடுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? சேமிப்பு கணக்கை அதிகப்படுத்துங்கள். வார்த்தை களிலும் சாதாரண வார்த்தை கூடாது, வார்த்தைகளிலும் வித விதமான உணர்வு மற்றும் பாவணைகள் இருக்கின்றன. மேலும் வார்த்தைகளின் மூலம் உணர்வுகள் மற்றும் பாவணைகள் தெரிந்து விடுகிறது. எனவே எந்த ஒரு வார்த்தை பேசினாலும் அதில் ஆன்மீக உணர்வு இருக்க வேண்டும் மற்றும் சுப, சிரேஷ்ட பாவணை இருக்க வேண்டும். வார்த்தையும் பேச வேண்டும் பாவணையும் இருக்க வேண்டும். பொறாமை, வெறுப்பு இவை மாயாவின் பாவணைகளாகும். சதா சுப உணர்வுகள் மற்றும் பாவணை இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கிறதா? என்று சோதியுங்கள். நேரத்தின் பொக்கிஷம், வார்த்தைகளின் பொக்கிஷம், சங்கல்பங்களின் பொக்கிஷம், சக்திகளின் பொக்கிஷம், ஞானத்தின் பொக்கிஷம், குணங்களின் பொக்கிஷம் ...... ஒவ்வொரு பொக்கிஷத்தையும் சோதியுங்கள். ஏனெனில் ஒவ்வொரு பொக்கிஷத்தின் கணக்கு சேமிப்பு செய்ய வேண்டும். இவை அனைத்து பொக்கிஷங்களின் கணக்கு நிறைந்திருக்கும் போது தான் முழு மதிப்பெண் அதாவது மதிப்புடன் தேர்ச்சி பெறுவதாகும். ஒரு பொக்கிஷம் சிறிது குறைவாக சேமிப்பாகி இருக்கிறது எனில் இதில் என்ன இருக்கிறது என்று யோசிக்காதீர்கள். ஆனால் மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்கு அனைத்து பொக்கிஷங்களின் கணக்கு நிறைந்திருக்க வேண்டும். நல்லது, ஒரு விநாடியில் தனது சங்கல்பத்தை எங்கு விரும்புகிறீர்கள், என்ன யோசிக்க விரும்புகிறீர்களோ அங்கு அவ்வாறே சிந்தனை நடைபெறும் என்று புரிந்து கொள்பவர்கள் கை உயர்த்துங்கள். ஒரு விநாடியில் மனம் கட்டுப்பாட்டில் வந்து விட வேண்டும். இவ்வாறு விநாடியில் ஏற்பட முடியுமா? ஒருவேளை செய்ய முடியும் எனில் கை உயர்த்துங்கள்.

நல்லது. இந்த வாயுமண்டலத்தில், மதுவனத்தில அமர்ந்திருக் கிறீர்கள். மதுவனத்தின் வாயுமண்டலம் சக்திசாலியாக இருக்கிறது. இந்த வாயுமண்டலத்தில் இந்த நேரத்தில் மனதை கட்டுப்படுத்த முடியுமா? விநாடியில் கட்டுப்படுத்தினாலும் சரி, நிமிடத்தில் செய்தாலும் சரி, ஆனால் கட்டுப்படுத்த முடியுமா? மனதிற்கு கட்டளை இடுங்கள் - ஆத்மா பரந்தாம நிவாசி ஆகிவிடு. பிறகு பாருங்கள் மனம் கட்டளை ஏற்கிறதா? ஏற்கவில்லையா? (டிரில்) நல்லது.

நாலாபுறங்களிலும் அனைத்து பொக்கிஷங்களுக்கும் எஜமான குழந்தைகளுக்கு, சதா கடினமானதை விநாடியில் மாற்றக் கூடிய சதா சகஜயோகிகளுக்கு, சதா சங்கல்பம், நேரம், வார்த்தை, செயல் போன்றவற்றை சிரேஷ்டமாக்கக் கூடிய, சதா சேமிப்பு கணக்கை அதிகப்படுத்தக் கூடிய, சதா மனதிற்கு எஜமான், மனம்-புத்தி-சன்ஸ்காரத்தை கட்டளைப்படி நடத்தக் கூடிய, இப்படிப்பட்ட சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, உள்நாட்டில் இருந்தாலும், அயல்நாட்டில் இருந்தாலும், ஆனால் உள்ளத்தில் தூரமில்லை, இப்படிப்பட்ட நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : உயர்ந்த தந்தை, உயர்ந்தவர்களாகிய நாம் மற்றும் உயர்ந்த காரியம் - இந்த நினைவின் மூலம் சக்திசாலி ஆகக் கூடிய பாப்சமான் ஆகுக.

இன்றைய உலகில் ஒரு உயர்ந்த வி,ஐ,பி யின் குழந்தை இருக்கிறார் எனில் அவர் தன்னையும் வி.ஐ.பி என்று புரிந்து கொள்வார். ஆனால் தந்தையை விட உயர்ந்தவர் யாரும் கிடையாது. நாம் அப்படிப்பட்ட உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள், உயர்ந்த ஆத்மாக்களாக இருக்கின்றேன் - இந்த நினைவு சக்திசாலியாக ஆக்குகிறது. உயர்ந்த தந்தை, உயர்ந்தவர்களாகிய நாம் மற்றும் உயர்ந்த காரியம் - இந்த நினைவில் இருப்பவர்கள் சதா பாப்சமான் ஆகிவிடுகின்றனர். முழு உலகில் சிரேஷ்ட மற்றும் உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஆகையால் உங்களுக்குத் தான் புகழ் மற்றும் பூஜை நடைபெறுகிறது.

சுலோகன்: சம்பூர்ன நிலை என்ற கண்ணாடியில் சூட்சும பற்றுதலை சோதியுங்கள் மற்றும் முக்தி அடையுங்கள்.